| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **10/02/2024** | முதல் | **14/02/2024** | |
| அறிக்கை எண் : | **012/ 2024** | வெளியீட்டு நாள் : | | **09/02/2024** | | |

**சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22° - 21° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை**<br>(04.02.2024 **முதல்** 08.02.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –14-02-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04/02 | 05/02 | 06/02 | 07/02 | 08/02 | **தேதி** | **நாள்-1**<br>10/02 | **நாள்-2**<br>11/02 | **நாள்-3**<br>12/02 | **நாள்-4**<br>13/02 | **நாள்-5**<br>14/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 34 | 35 | 34 | 34 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 36 | 37 | 37 |
| 22 | 22 | 21 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 23 | 22 | 23 |
| 3 | 3 | 2 | 2 | 2 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 2 | 0 | 2 | 3 |
| 81 | 76 | 85 | 87 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 100 |
| 41 | 44 | 44 | 41 | 37 | | 40 | 40 | 40 | 50 | 40 |
| 8 | 7 | 7 | 11 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 16 | 18 | 14 | 14 |
| வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

**குறுஞ்செய்தி :**

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 14 முதல் 18 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளதால், விவசாயிகள் உங்கள் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.

அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு *2* மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 14 முதல் 18 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அணைக்கல், முட்டுகொடுக்கல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு

பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (9 முதல் 22 பிப்ரவரி 2024):**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 9 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இயல்பை விட குறைந்தது முதல் இயல்பை ஒட்டிய லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**

9 பிப்ரவரி முதல் 15 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

9 பிப்ரவரி முதல் 15 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும்.16° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும்.18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : முந்திரி, கத்திரி, கால்நடை**

**முந்திரி:**

முந்திரியில் தண்டுத் துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் முக்கிய அறிகுறியாக மரத்தின் அடிப்பகுதியில் காணப்படும் சிறு துளைகள் அவற்றின் வழியே வெளிவரும் பிசின் போன்ற திரவம் மற்றும் புழு கடித்துப் போட்ட சக்கைகளும் காணப்படும். இதனால் மரங்களில் இலைகள் உதிர்ந்து மரம் காய்ந்து மொட்டையாகிவிடும்.

இதனைக் கட்டுப்படுத்த முதலில் தோப்பை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட தளிர்களை சேகரித்து அழிக்கவும்.

10 லிட்டர் தண்ணீருக்கு 45மிலி. என்ற அளவில் பிப்ரோனில் மருந்தினை கலந்து தண்டுப் பகுதி நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.

மேலும் மரத்தில் உள்ள துளைகளில் நன்கு தெளிக்க வேண்டும்.

**கத்திரி:**

தென்படுகின்றது.

இவ்வகை வண்டுகள் இலைகளின் பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகள் சல்லடை போல் காணப்படும். செடிகளில் வீரியம் குன்றி, நாளடைவில் காய்ந்து கருகி உதிர்ந்து விடும்.

இலைகளில் உள்ள வண்டினப் புழுக்களையும், முட்டை கூடுகளையும் சேகரித்து அழிக்கவும்.

மேலும் 1 டாங்க்கிற்கு 35 கிராம் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு என்ற விகிதத்தில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்

**கால்நடை:**

தமிழகத்தில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளில் வாரம்தோறும் சனிக்கிழமைகளில் கோழிகளுக்கு (RDVK) ரானிகெட் நோய் தடுப்பு மருந்து கொடுக்கபடுகிறது. விவசாயிகள் இதனை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.